**கவனிக்க.-** *2021.03.05 ஆந் திகதிய 2218 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி VI (அ) பிரசுரிக்கப்படவில்லை*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2219 - 2021 මාර්තු මස 12 වැනි සිකුරාදා - 2021.03.12

*2219 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 374 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 383 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |

**கவனிக்க.-** "மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மாச்சு மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

373 - B82213 - 5403 (2021/03)

# பதவிகள் - வெற்றிடம்

மினுவங்கொடை நகர சபை

**மேல் மாகண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்**

மேல் மாகண அரசாங்க சேவையில் மினுவங்கொடை நகர சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்த்து கொள்ளப்படுவதற்காக தகுதிவாய்ந்த,மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வசிப்பிடத்தையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

<table>
<tr><th>தொ இல.</th><th>பதவிப் பெயர்</th><th>பதவி எண்ணிக்கை</th><th>சம்பள குறியீட்டு இலக்கம்</th><th>சம்பள அளவுத் திட்டம்</th><th>கல்வி மற்றும் வேறு தகைமைகள்</th></tr>
<tr><td>01</td><td>வியாபார நிலைய நிர்வாகி தரம் III</td><td>01</td><td>MNI/2016 (அ.நி.சு. 03/2016 க்கு ஏற்ப)</td><td>27,140-10X300-11X350-10X495-10X660-45,540 (பதவியில் சேர்ந்து 03 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் முதலாவது வினைத் திறமை காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.</td><td>ஆட்சேர்ப்பு முறை :<br>சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுட்பட ஒரே தடவையில் (06) ஆறு பாடங்களிலும் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடமாவது (பொதுப் பரீட்சையல்லாமல்) சித்தியடைந்திருத்தல்.<br>தொழிற் தகைமை : சம்பந்தமில்லை<br>அனுபவம் : சம்பந்தமில்லை<br>உடற்றகுதி : பதவியில் கடமையாற்றுவதற்க போதிய உடல் மற்றும் உள ரீதியான யோக்கிதை உடைவர்களாக இருத்தல் அவசியம்.<br><br>எழுத்துமூல பரீட்சை :
<table>
<tr><th>பாடங்கள்</th><th>காலம்</th><th>மொத்த புள்ளி</th><th>சித்தி புள்ளி</th></tr>
<tr><td>உளப்பாங்கு மற்றும் விவேகப் பரீட்சை</td><td>1 மணி</td><td>100</td><td>40%</td></tr>
<tr><td>நடைமுறை நிகழ்வுகள் சம்பந்தமான சாதாரண புரிந்துணர்வு</td><td>1 மணி</td><td>100</td><td>40%</td></tr>
</table>
குறிப்பு : பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களிடமிருந்து வெற்றிடங்கள் நிரப்பப் படும்.<br>சாதாரண நேர்முகப் பரீட்சை : இதற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மட்டுமே இப் பரீட்சை நடாத்தப்படும்.</td></tr>
</table>

**2. பொதுத் தகைமைகள் :**

1. விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விசேட நற்குணமுடையவராகவும் நல்ல தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 03 வருடங்கள் மேல் மாகாண எல்லைக்குள் நிரந்தரமாக வசித்து வந்தவராக இருத்தல் வேண்டும் என்பதை நிரூபித்தல் வேண்டும்.

4. குறைந்த வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
5. அதிகூடிய வயதெல்லை : 30 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
6. இப் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தேவைப்படும் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதிக்கு அத் தகைமைகள் எல்லாவற்றையும் கொண்டிருத்தல் அவசியம்.

**3. சேவைக்கான நிபந்தனைகள் :**

1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் விதிகளுக்கும், நிதிக் கட்டுப்பாடுகளுக்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவை மேலாண்மை நடைமுறைக் கோவைக்கும், மேல் மாகாண சபை நிதிச் சட்ட திட்டங்களுக்கும், காலத்துக்குக் காலம் மேல் மாகாண சபை கௌரவ கவர்னர் அவர்களினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்/ மினுவங்கொடை நகர சபையினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகளுக்கும் அமைச்சினதும் மற்றும் திணைக்களத்தினதும் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும்.

**4. விண்ணப்பங்களை அனுப்புதல் :**

மேற்படி தகைமைகளையுடைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இதனுடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 2021.04.01 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு "செயலாளர், மினுவங்கொடை நகர சபை, மினுவங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மேலும், விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படாது என்பதுடன் இது சம்பந்தமாக எழுத்து மூலமாக அறிவிக்கப் படவும் மாட்டாது.
தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப் படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களை இணைத் தனுப்புதல் அவசியம்.

1. பிறப்புச் சான்றுப் பத்திரம்
2. கல்விச் சான்றிதழ்கள்
3. கிராம அலுவலர் சான்றிதழ்

இவ்விண்ணப்பங்கள் கோரப்படும் போது அல்லது கோரப்படும் இடைக்காலத்தில் அல்லது சேர்த்துக் கொள்ளல் அல்லது சேர்த்துக் கொள்ளப்படாமை அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகிய சகல அதிகாரங்களும் மினுவங்கொடை நகர சபையின் செயலாளருக்கே உரித்தாகும்.

பீ. ஏ. எஸ். எஸ். சந்தருவன்,
செயலாளர்,
மினுவங்கொடை நகர சபை.
மினுவங்கொடை.

நகரசபை அலுவலகம்,
மினுவங்கொடை
2021, மாச்சு 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் மினுவங்கொடை நகர சபை ........................................................**
**பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. முதலொழுத்துக்களுடன் பெயர் : ...............................................................................................
2. முழுப் பெயர் : ...............................................................................................
3. நிரந்தர வதிவிட மாவட்டம் : ...............................................................................................
4. நிரந்தர முகவரி : ...............................................................................................
5. தேசிய ஆளடையாள அட்டை இல. : ...............................................................................................
6. பெண்/ஆண் : ...............................................................................................
7. பிறந்த தினம் : வருடம் : .................. மாதம் : ..................... திகதி : .....................
8. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது : வருடம் : .................. மாதம் : ................ நாட்கள் : ..............
9. விவாகமானவர்/விவாகமாகாதவர் : ...............................................................................................
10. தொலைபேசி இலக்கம் : ...............................................................................................
11. கல்வித் தகைமை
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) ...............................................................................................
12. வேறு தகைமைகள் : ...............................................................................................
13. சேவை அனுபவம் : ...............................................................................................
14. நீங்கள் எப்போதாவது நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? ...............................................................................................

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியெனவும் உண்மையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், தெரிந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என நன்கு அறிவேன்.

..............................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..........................................

விண்ணப்பதாரிக்காக நிறுவனத் தலைவரின் சான்று :

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ....................................................................................... என்பவர் தற்போது இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................................................................. ஆளராக சேவையிலீடுபட்டுள்ளார். இந்த பதவிக்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது. அவர் எவ்விதத்திலாவது அல்லது நடத்தைசம்பந்தமான தண்டனையொன்றுக்கு(எச்சரிக்கைவிடுப்பு நீங்கலாக) ஆளாகவில்லையெனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினை பூர்த்தி செய்துள்ளதாகவும் இத்தால் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பத்தை அனுமதிக்கிறேன்./அனுமதிக்கவில்லை.

..............................................................
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

பெயர் : ..............................................................................................
பதவி : ..............................................................................................
திகதி : ..........................................

03-347

## மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு
## நீர்கொழும்பு மா நகர சபை

நீர்கொழும்பு மா நகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து "மா நகர ஆணையாளர், மா நகர சபை, நீர்கொழும்பு" எனும் முகவரிக்கு 2021.04.12 ஆந் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**திறந்த ஆட்சேர்ப்பு :-**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 01 | தீயணைப்பு படைவீரர் | 03 | - | RS1 - 2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூ.29540 - 7X300 - 27X370 - 41630.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ.29540.00, 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத் திறமைக்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். |

01. தீயணைப்புப் படைவீரர் பதவிக்காக தேவையான தகைமைகள்:-

சேவை வகுதி :- ஒழுங்கு முறை சேவை

கல்வித் தகைமைகள் : - ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டியதோடு அச் சந்தர்ப்பத்தில் அல்லது மற்றுமொரு வேறொரு சந்த்தர்ப்பத்தில் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உடற் தகைமைகள்** :-

(i). 162 செ.மீ. இற்கு குறையாத உயரம் மற்றும் உயிரி - நிறைச் சுட்டி உரிய நியம முறையில் இருத்தல் வேண்டும். (உயிரி - நிறைச் சுட்டி 18.5 இலிருந்து 24 வரை இருத்தல் வேண்டும்.)

(ii). அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் அவசியமாகும்.

(iii). கண்பார்வை தொடர்பான தேவைகள்:- மூக்குக் கண்ணாடியின்றி அல்லது தொடுகை வில்லையின்றி கண்பார்வை குறைந்த பட்சம் 6/6 மற்றும் 6/12 இடையிலும் வர்ணங்கள் பற்றிய பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும்.

(iv). செயற்கையான உடல் மாற்றங்கள் செய்யப்படாதிருத்தல் வேண்டும். (உதாரணம் –பச்சை குத்துதல் போன்றவை.)

**வேறு தகைமைகள் :-**

(i). விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று மேல் மாகாணத்தில் குறைந்தது மூன்று (03) வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(iii). திருமணமாகாத ஆணாக இருத்தல் வேண்டும்.

(iv). விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டியதோடு சட்ட விரோத செயற்பாடுகளில் தொடர்பில்லாத ஒருவராக இருக்க வேண்டியதோடு இதனை பொலிஸ் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(v). பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு அந்தத் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**வயது :-**

குறைந்த வயதெல்லை - விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

உச்சவயதெல்லை - 24 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்புப் செய்யும் முறை :-**

(i). எழுத்துமூலப் பரீட்சை மற்றும் தொழிற்சார் (செய்முறை) பரீட்சையில் பெறும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களுக்காக பயிலுநர் தீயணைப்பு படைவீரர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(ii). பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பயிலுநர்களும் உடல், உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(iii). வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால பயிற்சிப்பாடநெறியொன்றை பயிலவேண்டும். பயிற்சிக் காலத்தில் மகிழ்ச்சிகரமான வேலை மற்றும் நடத்தையைக் கொண்டிராத அல்லது எதிர்பார்க்கப்படும் தொழில் தரத்தை அடைய முடியாத பயிலுநர் தீயணைப்பு படைவீரர்களை எதுவித நட்டஈடும் இன்றி பயிற்சியில் இருந்து நீக்கும் அதிகாரம் நியமிக்கும் அதிகாரிக்கு உண்டு.

(iv). பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்கின்ற பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் தீயணைப்பு படைவீரர் பதவியில் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். பயிற்சி காலம் நிரந்தர சேவைக்காலத்திற்குள் கணக்கிடப்படும் என்பதுடன் பயிற்சி பூர்த்திசெய்யப்பட்டு சேவையில் அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டாவது படிமுறையில் வைக்கப்படுவார்கள்.

(v). பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூ.10,000.00 வழங்கப்படும்.

(vi). பயிற்சிக் காலத்தினுள் எந்தவொரு பயிலுநர் தீயணைப்பு படைவீரருக்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(vii). பயிற்சிற்காக தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நியமனம் பெற்ற திகதி தொடக்கம் 5 வருட காலம் உரிய உள்ளூராட்சி மன்றத்தில் சேவை புரிவதாக நியமன அதிகாரியுடன் ரூ.500,000.00 பெறுமதியான பிணைமுறியொன்றில் பயிற்சியை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

(viii). பயிலுநரின் விருப்பத்திற்கு அமைய பயிற்சிபெறும் காலத்தினுள் பயிற்சியில் இருந்து வெளியேறக் கருதும் பட்சத்தில், பயிற்சிற்காக செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ix). தீயணைப்பு படைவீரர் பதவிக்கு நியமனம் பெற்ற நியமனதாரர்கள் உரிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் அதிகார எல்லைக்குள் வசிக்குமாறு பணிப்பிக்கப்படலாம்.

**எழுத்துமூலப் பரீட்சை :-**

| *பாடங்கள்* | *காலம்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *சித்திபெறும் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை (தேசிய வலய மற்றும் உலகின் பல்வேறு சூழல்களினுள் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, விஞ்ஞான ரீதியான, அரசியல் ரீதியான, பொருளாதார மற்றும் ஏனைய பொருத்தமான விடயங்கள் தொடர்பாகவும் அறிவியல் சார்ந்த மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி தொடர்பாகவுள்ள அறிவு, தர்க்கத் திறன்,கணிதத் திறமைகள், தர்க்க ரீதியான முடிவெடுத்தல் மற்றும் நேரத்தினை முகாமைத்துவம் செய்தல், பரிசோதித்தல் போன்றவற்றுக்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரம் ஒன்றாகும்.) | 01 மணி. | 100 | 40 |

**தொழில்சார் பரீட்சை :-**

எழுத்துமூலப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்களுக்கான தொழில் சார் பரீட்சை (செயன்முறை)

இப் பரிசோதனைகளில் கலந்து கொள்ளும் போது உடற் தகுதி பற்றி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு வைத்தியரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வைத்திய சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்திபெறும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| **தாங்கிக் கொள்ளும் ஆற்றல்**<br>(i). ஓடுதல் (01 கிலோ மீற்றர் தூரத்தை ஓடுவதற்கு எடுக்கின்ற ஆகக் குறைந்த நேரத்திற்கு ஏற்ப முன்னுரிமை வழங்கல்)<br>(ii). டிப்ஸ் அடித்தல் (சரியாக டிப்ஸ் 25 இனை அடிப்பதற்கு எடுக்கின்ற குறைந்த நேரம்)<br>(iii). பாரம் தூக்கிக் கொண்டு செல்லல் | 60 | 36 |
| **சமநிலை**<br>(i). ஏணி வழியே செல்லல்<br>(ii). கயிற்றினால் இறங்குதல் | 40 | 24 |

**சாதாரண நேர்முகப் பரீட்சை :-**

அடிப்படை தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும். புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**தொழில் விபரம் :-**

(i). தீ அணைப்பு மற்றும் உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்.
(ii). அம்பியூலன்ஸ் வண்டிச் சேவை, தொழில் நுட்ப சேவைகள், தொடர்பாடல் கடமைகள், விஜபி பாதுகாப்பு சேவைகள் மற்றும் தீ தடுப்புக் கடமைகள்
(iii). அவசர அனர்த்தங்கள், அவசரமாக விடுவிப்புச் செய்தல் மற்றும் பல்வேறு மனிதாபிமான தேவைக்கான நடவடிக்கைகள்.
(iv). தீ அணைப்பு சேவை செய்யும் இடங்களை நடாத்திக் கொண்டு செல்வதற்காக தேவையான சகல நடவடிக்கைகளும்.
(v). சேவையிலுள்ள உயர் அதிகாரிகளினால் ஒதுக்கப்படுகின்ற கடமைகளின் கீழுள்ள சகல கடமைகளும்.
(vi). பதவி தொடர்பாக வழங்கப்படுகின்ற திணைக்களக் கட்டளைகளுக்கு ஏற்ப தமது கடமைகளை நிறைவேற்றல்.
(vii). நிறுவனத் தலைவரினாலோ அல்லது திணைக்களத் தலைவரினாலோ வழங்கப்படுகின்ற எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றல்.

**பதவிக்கு உரியதான ஏனைய தகைமைகள் :-**

(i). இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று மேல் மாகாணத்தில் குறைந்த பட்சம்03 வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வதிவாளர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
(iii). நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
(iv). பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல்.

**பதவியின் தன்மை :-** நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது.

*** மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு :-**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவி வெற்றிட எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 01 | பணிக் கள நிருவாகி | 02 | **III** | **MN** 1-2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூ. 27140 -10**X**300-11**X**350-10**X**495-10**X**660-45540.00 இச் சம்பளத் திட்டத்தின் படி 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத் திறமைகாண் தடை தாண்டலில் சித்தி பெறுதல் வேண்டும். |
| 02 | சுகாதார நிருவாகி | 01 | | |

*01. /02. பணிக் கள நிருவாகி* **III** */சுகாதார நிருவாகி* **III**

**கல்வித் தகைமைகள்** : க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டுதிறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (இதில் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

**அனுபவம்** : உள்ளூராட்சி நிறுவனத்தில் **PL**-1மற்றும் **PL**-2சம்பள வகுதி இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவை நிரந்தரமாக்கப்பட்ட மற்றும் நிரந்தரமான 05 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல். சேவைக் காலத்தினை நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**உடற் தகைமைகள்** : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான உடல்நல மற்றும் மனநல தகுதிஉடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**ஏனையவை :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு அண்மித்த (03) ஆண்டுகள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தன்மை கொண்டவராக இருக்க வேண்டும்.

**வயது :**

| | |
|---|---|
| குறைந்த வயதெல்லை<br>உச்ச வயதெல்லை | ஏற்கெனவே மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**ஆட்சேர்ப்பு முறை :-**

**01. எழுத்து மூலப் பரீட்சை**

| விடயங்கள் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியெய்த வேண்டிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| பொது அறிவு மற்றும் நுண்ணறிவு | 100 | 40% |
| துறை தொடர்பான அறிவினைப் பரீட்சித்தல் | 100 | 40% |

குறிப்பு 1 :- எழுத்து மூல பரீட்சையில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு அளவான எண்ணிக்கையினை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதோடு, இப் பரீட்சைகள் இரண்டிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெறுவோர்களிலிருந்து வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

குறிப்பு 2 :- தற்பொழுதுள்ள வெற்றிடங்களுக்காக அதி கூடிய புள்ளிகள் பெற்ற வரிசைக்கேற்ப நியமனம் வழங்கப்படுகின்றதோடு, நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படுகின்ற தேவைப்பாடுகளையும் இங்கு பரிசீலிக்கப்படும்.

**02. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | தேர்ந்தெடுப்பதற்கு பரிசீலிக்கப்படுகின்ற ஆகக் குறைந்த சித்தி பெறும் புள்ளிகள் |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக் காலம் | 15 | 25 |
| பதில் கடமை புரிதல் அல்லது கடமைகளை நிறைவேற்றுதல் | 10 | |
| குறித்த பிரிவு தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் | 20 | |
| ஆளுமை | 05 | |

குறிப்பு – சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படுகின்ற தேவையான அனைத்தும் இங்கு கருத்திற் கொள்ளப்படும்.

**பதவியின் தன்மை :-**

- நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.
- நியமனம் பெற்று 05 ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி மொழித் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- விதவைகள் மற்றும் அநாதைகள் /விதுரர்கள்அநாதைகள் நிதியத்துக்கு பங்களிப்புச் செலுத்துதுல் வேண்டும்.

**மேலுள்ள திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பதவிகளுக்கான பொதுவான விடயங்கள் :-**

**மொழித் திறன் :-**

| மொழி | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய திறமைகள் |
|---|---|
| 1. அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மொழியொன்றில் சேவையில் இணைந்து கொண்ட அலுவலர் ஒருவர் உரிய அரச கரும மொழியில் தேர்ச்சியினை நன்னடத்தைக் கால எல்லையினுள் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். |
| 2. ஏனைய அரச கரும மொழி | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 ஆம் இலக்க மற்றும் அதற்கு இடைநேர் சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 3. கூட்டணி மொழி | ஏற்புடையதாகாது. |

**மேல் மாகாண சபை அரசாங்க சேவை செயன் முறை சட்டக் கோவைகளில் காட்டப்படுகின்ற பொது நிபந்தனைகளுக்கு மேலமான நிபந்தனைகள் :-**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவை நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணக் கோவை நிபந்தனைகளுக்கும், அவ்வப்போது மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநரினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கட்டளைகளுக்கும், நிறுவனத் தலைவர்களினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கும் ஏற்ப கட்டுப்படல் வேண்டும்.

**மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் காட்டப்படுகின்ற பொருள் கோடல்களுக்கு அப்பாற்பட்டதான விளக்கங்கள் :-**

மேல் மாகாண அரசாங்க சேவைகள் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் காட்டப்படுகின்ற பொருள் கோடல்களுக்கு அப்பாற்பட்டதான எந்தவொரு விளக்கங்களும் அது தொடர்பான மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு /மேல் மாகாண கௌரவ ஆளுநருடன் கலந்தாலோசித்து செய்யப்படும்.

மா நகர ஆணையாளர்(அ.பொ.),
மா நகர சபை,
நீர்கொழும்பு.

(அலுவலக உபயோகத்திற்காக)

**................................ எனும் (மட்டுப்படுத்தப்பட்ட /திறந்த) பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்**
**நீர்கொழும்பு மா நகர சபை**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..........................................................................................
2. முழுப் பெயர் :-..................................................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ..........................................................................
4. நிரந்தர முகவரி :- ..................................................................................................
5. தொலைபேசி இலக்கம் :- ...............................................................................................
6. தபால் முகவரி :- ..................................................................................................
7. நிரந்தர வதிவிட மாவட்டம் :- ..........................................................................................
8. நிரந்தர வதிவிட செயலாளர் பிரிவு :- ..............................................................................
9. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைப் பிரதேசம் :- ..........................................................................................
10. பிறந்த திகதி :- ஆண்டு : ................... மாதம் : ................ திகதி : ..............
    2021.04.12 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள்: ................... மாதங்கள் : ................ நாட்கள் : ..............
11. விவாகமானர்/விவாகமாகாதவர் :- ..........................................................................
12. கல்வித் தகைமைகள் :- (புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
13. அனுபவங்கள் :- (புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
14. தொழில் தகைமைகள் :- (புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
15. ஏனைய தகைமைகள் :- ..................................................................................................
16. நீங்கள் எப்போதேனும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா என்பது பற்றி :- ..............................................
    .........................................................................................

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்குஆட்சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகளுக்கு அமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யான தகவல்கள் என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :- .....................................................

**ஏற்கனவே அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற**
**விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

மேலேயுள்ள விண்ணப்பப் படிவத்தின் விண்ணப்பதாரியான திரு. / திருமதி / செல்வி ............................................................ ...............................இதுவரை இத்திணைக்களத்தில் / நிறுவகத்தில் .................................................... ஆக சேவையாற்றுபவர் ஆகும். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதத்திலும் அல்லது ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் பவடித்தினை நான் பரிந்துரை செய்கிறேன் /செய்யவில்லை.

..............................................................
திணைக்களம் /நிறுவகத் தலைவரின் கையொப்பம்

பெயர் :- ...........................................................................
பதவி :- ...........................................................................
திகதி :- ...........................................................................

03-524

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (1) ஆம் சரத்திற்கு இணங்க ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பதுளை மாநகர சபையால் இதன் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் பதுளை மாநகர சபையால் பொது பயன்பாட்டிற்கு கையகப்படுத்துவதற்கு 2020.11.05 ஆந் திகதி E 05 இன் கீழ் சபை அனுமதிக்கிணங்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச பொது மக்களால் அல்லது இவ்வீதிக்கான காணியின் உரிமையாளர் என்கின்ற உரித்துடையவர் அல்லது யாராயினும் ஒருவர் ஆட்சேபனை ஒன்றை தெரிவிக்க இருப்பின் இவ்வறிவித்தல் வர்த்தமானயில் வெளியிட்ட நாள் தொடக்கம் 30 நாட்களுக்ககுள் தமது ஆட்சேபனையை ஆதாரங்களுடன் எழுத்துருவில் மாநகர சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

உரிய கால எல்லைகள் ஆட்சேபனைகள் தெரவிக்காத விடத்து ஆட்சேபனைகள் எதுவுமில்லை என்று கருத்தில் கொண்டு வர்த்தமானி அறவித்தல் மூலம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள இதன் உப பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை மாநகர சபைக்கு உரித்தான வீதிகள் என்ற ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படும் என்பதனை அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறியத் தருகிறேன்.

நகர ஆணையாளர்,
மாநகர சபை,
பதுளை.

பதுளை மாநகர சபை அலுவலகம்
2021, பெப்புருவரி 22.

**அட்டவணை**

| தொ. இல. | வீதியின் பெயர் | வீதி ஆரம்பிக்கும் இடம் | வீதி முடிவடையும் இடம் | இடது பக்க வரிமதிப்பீட்டு இல. | வலது பக்க வரிமதிப்பீட்டு இல. | நீளம் மீ. | அகலம் மீ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | (கெட்டவளை பிரதான வீதியிலிருந்து கெட்டவளை ஒழுங்கு வீதி நோக்கி) | | |
| 01 | பதுளை பண்டாரவளை கெட்டவளை ஒழுங்கு வீதி | இடது/ கே. எம். ஏ. ரென்டோல் அவர்களின் வீட்டின் அருகில் வரிமதிப்பீட்டு இல. 28. | இடது/ பியசிறி விதாரண அவர்களின் வீட்டின் அருகில் வரிமதிப்பீட்டு இல. 16/1 | 28<br>16/5<br>16/1 | 16<br>16/7<br>16/1 | 120 m | 3.03m |
| | | வலது/ எம். டி. எல். ரென்டோல் அவர்களின் வீட்டின் அருகில் வரிமதிப்பீட்டு இல. 16 | வலது/ பியசிறி விதாரண அவர்களின் வீட்டின் அருகில் வரிமதிப்பீட்டு இல. 16/1 | | | | |

03-249

**மாத்தறை மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தின் கீழ் வீதிகளுக்கு பெயர் இடல், சிலுவைகள் அமைத்தல் மற்றும் நிருவகித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீதிகளுக்கான பெயரிடல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது*

மாத்தறை மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் 71 (1) மாநகர சபை கட்டளைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்தின் மாகாண சபையின் (தொடர் ஒழுங்கு விதியின் படி) சட்டளைச் சட்டத்தின் 2 (1) (அ) பிரிவிற்கமைய பிரதான அமைச்சர் அவர்களினால் பெற்றுத் தந்த அனுமதியின் படி கீழே குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு, தற்போதைய பெயரில் உள்ள வீதிகளுக்கு புதிய பெயர்கள் இடப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

காஞ்சனா கே தல்பாவில,
மாத்தறை நகர ஆணையாளர்.

மாத்தறை மாநகர சபை அலுவலகம்,
2021, சனவரி 26.

**அட்டவணை**

| இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டம் | வீதியின் தற்போதைய பெயர் | புதிதாக வைக்கப்பட்ட பெயர் | வீதி விபரம் |
|---|---|---|---|---|---|
| 01 | மாத்தறை மா நகர சபை | மாத்தறை | மாத்தறை உயன்வத்த பியதுவ வீதியின் 2 ஆம் குருக்கு வீதி | காலம் சென்ற சமிந்த குமார ரணசிங்க மாவத்தை | ஆரம்பம் : பலதுவ வீதி<br>முடிவு : திரு. என். ஏ. ரத்நாயக்கவின் காணி |

03-301

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.